★ காஞ்சிபுரம்
★ பெனாரிஸ்
★ செவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டு வேஷ்டிகள்
மற்றும் சகலவிதமான
★ பிளவ்ஸ் பீஸ்
வகைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்,
உட்புறம்
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கள வைபவங்களுக்கு ஏற்ப, உடுபுடைவைகள்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்,
யாழ்ப்பாணம்.

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 11 வெள்ளிக்கிழமை (26 – 11 – 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 363

## இன்று நள்ளிரவு மணிகள் ஒலிக்க மாவீரருக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 26

கடந்த ஒரு வார காலமாக தமிழீழ மக்களால் உணர்வு பூர்வமாகவும், எழுச்சி மிகுந்த வகையிலும் அனுஷ்டிக்கப்படும் மாவீரர் வாரத்திற்கு சிகரம் வைக்கும் சிறப்பு நிகழ்வு இன்று நள்ளிரவு நடைபெற உள்ளது.

தமிழ் இனத்தின் சுதந்திரத்துக்காக, கௌரவத்திற்காக, பாதுகாப்புக்காக தமது இன்னுயிரை ஈந்த தற்கொடையாளர்களான மாவீரர்களுக்கு தமிழீழ மக்கள் அனைவரும் ஒரே நேரத்தில் அமைதி வணக்கம் செய்து அஞ்சலி செலுத்துவர்.

இன்று நள்ளிரவு 12 மணி 01 செக்கனுக்கு தமிழீழமெங்கும் சமகாலத்தில் அனைத்து ஆலய, தேவாலய மணிகளும் இரண்டு நிமிடங்கள் ஒலி எழுப்பும், புலிகளின் குரல் வானொலியிலும் இரண்டு நிமிடங்கள் மணி ஒலிக்கும்

### தலைவர் விசேட உரை

மாவீரர் தினத்தையொட்டி தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் இன்று நள்ளிரவு ''புலிகளின் குரல்'' வானொலியில் விசேட உரை ஆற்றுவார்.

நள்ளிரவு 12-02 மணிக்கு மாவீரர் ஈகைச் சுடர் ஏற்றிய பின்னர், தேசியத் தலைவரின் சிறப்பு உரை இடம் பெறும்.

புலிகளின் குரல் வானொலியின்சேவை இன்றிரவு 9 மணிக்குப் பின்னர் 12-30 மணி வரை நீடிக்கப்படும். (அ-3)

அந்த நேரத்தில் எல்லா மக்களும் அமைதி வணக்கம் செலுத்துவார்கள்.

நினைவொலி எழுப்பப்படும் போது வீதியால் பயணம் செய்பவர்கள், நடந்தாயினும், வாகனத்திலாவது சென்றால் அந்த அந்த இடத்திலேயே நின்று அமைதி வணக்கம் செய்வர்.

நள்ளிரவு 12.02 மணிக்கு மாவீரர் துயிலுமில்லங்களில் சுடரேற்றல் நிகழ்வு இடம் பெறும். அவ்வேளை மாவீரர் சுடரேற்றல் பாடலை, சுடரேற்றும் நிகழ்வில் பங்குபற்றும் மாவீரர்களின் பெற்றோரும், உரித்துடையோரும் சேர்ந்து பாடுவர். பொதுமக்கள் தமது வீடுகளில் முன்பாகவும் சுடரேற்றி மாவீரருக்கு அஞ்சலி செலுத்துவர்.



முப்பத்தொன்பதாம் அகவையை இன்று நிறைவெய்தும் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் வாழ்க பல்லாண்டு! வாழியவே!

## தமிழர் மீது தாக்குதல்; தூதர்களுக்கு கடிதம்

கொழும்பு, நவ. 26

கொழும்பில் உள்ள தமிழர்களைத் தாக்கும் திட்டம் ஒன்று இருப்பதாக கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு நேற்று விநியோகிக்கப்பட்ட கையால் எழுதப்பட்ட கடிதம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று (வெள்ளி) இத்தாக்குதல் இடம்பெறவிருப்பதால் உடனடியாகத் தலையிட்டு தமிழ் மக்களுக்கு உதவுமாறு அக்கடிதமூலம் வெளிநாட்டு அரசாங்கங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

கொழும்பு குடிமக்கள் முன்னணி என்ற அமைப்பு இக்கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் தங்கள் மாவீரர் தினத்தில் அரசுப் படைகளுக்கு எதிரான தாக்குதலில் ஈடுபடுவது உண்டு என்பதால் அதற்குப் பதிலடியாக கொழும்புத் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்த சில தீய சக்திகள் திட்டமிடலாம் என்று அஞ்சப்படுவதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

இன்னும் 72 மணித்தியாலங்களில் கொழும்புத் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்த திட்டமிடப்படுவதாக மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்து இருக்கிறார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியும் இத்தாக்குதல் அபாயப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தெற்கில் இனக்கலவரம் வெடிக்கும் ஆபத்து

# கலகம் அடக்கும் படை தயார் நிலையில்

## குப்பிளானில் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், நவ. 26

குப்பிளான் பகுதியில் நேற்றிரவு 9 மணியளவில் பொம்மர்கள் குண்டு வீச்சு நடத்தின. பலாலி பக்கமாக இருந்து வந்த பொம்மர்கள் இரண்டு அப்பகுதியில் மாறி மாறி இரு குண்டுகளை வீசின. சேதவிவரங்கள் தெரிய வரவில்லை. (இ-9-5)

## உபாலி நிறுவனத்தில் குண்டுப் புரளி!

### அலுவலகம் மூடப்பட்டது

கொழும்பு, நவ. 26

திவயின, ஐலண்ட் ஆகிய பத்திரிகைகளை வெளியிடும் உபாலி பத்திரிகை நிறுவன கட்டடத்தில் குண்டு வைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த அநாமதேய தொலைபேசித் தகவலை அடுத்து அந்த நிறுவன ஊழியர்களுக்கு நேற்று விடுமுறை வழங்கப்பட்டது அதனால் மேற்படி இரு பத்திரிகைகளும் இன்று வெளிவரமாட்டா என அறிவிக்கப்பட்டுள்ளது.

குண்டு வைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து குண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் படையினர் கட்டடத்தில் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர் என்றும் — ஆயினும் அங்கு வெடிபொருள் எதுவும் காணப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

உபாலி நிறுவனத்தின் இணை முகாமைத்துவப் பணிப்பாளர் லெஸ்லி தர்மரத்தினாவை நிறுவனத்தின் வளவுக்குள் பிரவேசிப்பதைத் தடை செய்யும் தடை ஆணை ஒன்றை நிறுவன நிர்வாகத்தினர் நீதிமன்றம் மூலம் விடுத்துள்ளனர்.

நிறுவன நிர்வாகத்தினரிடையே ஏற்பட்டுள்ள இந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தலைநகர் கொழும்பில் முழு அளவில் பாதுகாப்பு

கொழும்பு, நவம்பர் 26

தெற்கில் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள மக்கள் கலவரங்களில் ஈடுபடலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் தமிழர்களைத் தாக்கும் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், இன்னும் 72 மணித்தியாலங்களுக்குள் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதனால் கொழும்பு மற்றும் தென்பகுதி எங்கும் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜன்சிச் செய்திகள் தகவல் வெளியிட்டன.

ஆயுதந் தரித்த இராணுவத்தினரும் கலகம் அடக்கும் பொலீஸாரும் கொழும்பில் நிறுத்தப்பட்டுள்ளனர் என்றும் —

முக்கிய சந்திகளில் கலகம் அடக்கும் படையினர் கண்ணீர்ப் புகை துப்பாக்கிகள் சகிதம் இரும்புத் தொப்பிகள் அணிந்து காணப்படுகின்றனர் என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது.

பூநகரித் தாக்குதலில் பல நூற்றுக்கணக்கான படையினர் கொல்லப்பட்டது குறித்து தெற்கில் சிங்கள மக்கள் சீற்றம் கொண்டிருப்பதாக பி.பி ஸியின் கொழும்புச் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

பி. பி. ஸி. செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

பிரபாகரனின் பிறந்த நாளான நவம்பர் 26 இல் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்த கூடும் என்று பிரதமர் ரணில் எச்சரித்துள்ளார்.

தெற்கில் தமிழ் மக்களுக்கு எதிராக வன்முறைகள் வெடிக்கக் கூடும் என்ற அச்சங்களும் எழுந்துள்ளன.

1983 இல் நடந்தது போல இனக்கலவரங்கள் நாட்டின்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலியில் ஹெலி தாக்கு படகுச் சேவை நடந்தது

யாழ்ப்பாணம், நவ. 26

கிளாலிக்கடற் பிராந்தியத்தில் நேற்றுப் பயணிகள் படகுச் சேவை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் ஆலங்கேணியில் இருந்து கிளாலி நோக்கி வந்த படகுகளை நோக்கி ஹெலிக்கொப்டர் ஒன்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது.

எனினும் படகுச் சேவை தடங்கலின்றி நடைபெற்றது யாழ்ப்பாணப் பகுதிக்கு வருவதற்காக கிளிநொச்சி ஆலங்கேணியில் நீண்ட நாட்களாக காத்திருந்த அனைவரும் நேற்றுடன் வந்து சேர்ந்து விட்டனர் என தெரிவிக்கப்பட்டது. அத்துடன் உணவுப் பொருள்களும், எரிபொருளும் வந்து சேர்ந்தன. (இ-15)

## கருணாநிதி தலைமையில் தி. மு. க செயற்குழு கூடியது

### 40 உறுப்பினர்கள் வரவில்லை

சென்னை, நவ. 26

திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்குழு நேற்று சேலத்தில் தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி தலைமையில் கூடியது.

178 செயற்குழு உறுப்பினர்களில் 138 பேர் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை திரு. கருணாநிதி பின்னர் செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

தீர்மானங்கள் வருமாறு:-

★ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க தி. மு. க. விரும்பவில்லை. இலங்கையில் உள்ள தமிழர்களின் நலன்களைப் பாதுகாக்க இந்திய அரசு உடனடியாகத் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என தி.மு.க. கோருகின்றது.

★ வை. கோபாலசாமியையும் அவரது ஆதரவாளர்களையும் தி.மு.க. விலிருந்து நீக்கியதை செயற்குழு ஆமோதித்தது. (ஒ-எ)

(மற்றொரு செய்தி 4 ஆம் பக்கத்தில்)

## படையினரின் தாக்குதலில் மீனவர் ஒருவர் உயிரிழப்பு

### மற்றும் ஒருவரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், நவ. 26

கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்களின் படகை நோக்கி கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் மேற்கொண்டனர். இதில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றும் ஒருவரைக் காணவில்லை. கையிலும் காலிலும் காயம் அடைந்த மற்றும் ஒருவர் நீந்திக் கரையை அடைந்தார்.

பூநகரி — கல்முனைக் கடற்பரப்பில் நேற்று அதிகாலை 3.00 மணி அளவில் இச்சம்பவம் நடந்தது.

சம்பவத்தில் நாவாந்துறையைச் சேர்ந்த சொக்காஸ் யேசுதாஸ் (வயது 48) என்பவரே கொல்லப்பட்டவர் ஆவார்.

அதே இடத்தைச் சேர்ந்த மலைக்காஸ் தேவதாஸ் என்பவர் (வயது 40) தாக்குதல் நடைபெற்ற வேளையில் கடலில் குதித்தார். அவருக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை.

இத்தாக்குதலின் போது நீந்திக் கரை சேர்ந்தவர் தேவதாஸின் சகோதரரான மலைகாஸ்எ மரியானூஸ்பிள்ளை (குணம்-வயது 19)என்பவரே.

கடற்படையினரின் தாக்குதலின் போது இவரது இடது

(4 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



இப்படிச் சாட்டி தாங்களே செய்கிற யோசனை போல!

## குடாநாட்டில் தொடர்ந்து மழை

யாழ்ப்பாணம், நவ. 26

குடாநாட்டில் தொடர்ந்து மழை பெய்வதால் தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் நிற்கிறது. குளங்கள் நிரம்பி வழிகின்றன. சில இடங்களில் உப உணவுப் பயிர்கள் அழியும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று வியாழக்கிழமை காலை 8.00 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் 96.2 மில்லி மீற்றர்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கே தாழமுக்கம்

கொழும்பு, நவ. 26

இலங்கையின் கிழக்கே தாழ்பவன அமுக்கம் இன்னமும் மையம் கொண்டிருப்பதாகவும்—

வடக்கு, வடமத்திய, வடமேற்கு, வடகிழக்கு, ஊவா மாகாணங்களில் இடைக்கிடை மழை பெய்யும் என்றும் — வானிலை அவதான நிலையம் அறிவித்தது.

வடமத்திய, கிழக்கு மாகாணங்களில் சுமாரான மழை பெய்யும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் நேற்றுக்காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் 157 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது. (இ-எ)

## இராணுவத் தளபதிகள் கொழும்பில் இருந்தபடி போர் பற்றி பேசுகின்றனர்

### நாடாளுமன்றத்தில் நேற்று சிறிமாவோ பேச்சு

கொழும்பு, நவ. 26

ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ போன்ற இராணுவத் தளபதிகள் களத்திலே நின்று போரைத் தலைமை வகித்து நடத்திச் சென்றனர். ஆனால் தற்போதைய இராணுவத் தளபதிகள் பலாலி முகாமில் இருந்தபடியே போரைக் கவனித்து வருகின்றனர். கொழும்பில் இருந்து கொண்டு அவர்கள் போர் பற்றிப் பேசுகின்றனர்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு சம்பந்தமான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்கா பேசுகையில் இவ்வாறு கூறினார்.

திருமதி பண்டாரநாயக்கா மேலும் கூறியதாவது:

''வடக்கு - கிழக்குப்போரில் வெற்றிபெற வேண்டுமாயின் வடபகுதி மக்களின் உள்ளங்களை முதலில் வெற்றியீட்ட வேண்டும். இது அத்தியாவசியமானதாகும்.

வடபகுதி மக்களுக்கு அத்தியாவசிய நுகர்வுப் பொருள்கள் கூட கிடைப்பதில்லை. அதனால் அவர்கள் விடுதலைப் புலிகள் காட்டும் ஈழநாட்டை பெறுவதற்கு ஆதரவு காட்டுகின்றனர். எனவே பிரிவினைவாதத்துக்கு எதிராக யுத்தஞ் செய்வதற்கு முன்னர் அத்தியாவசிய நுகர்வுப் பொருள்கள் வடபகுதி மக்களுக்குக் கிடைக்கச்செய்ய வேண்டும். இந்த யுத்தத்தில் வெற்றி பெற இது முக்கிய காரணியாக அமையும்.

[illegible]

(4 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்கட்சித் தலைவர்களுக்கு புலிகளால் ஆபத்து!

### ரணில் எச்சரிக்கிறார்

விடுதலைப் புலிகளினால் எதிர்க்கட்சித் தலைவர்கள் குறி வைக்கப்படலாம்.

இப்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எச்சரித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் பேசுகையில் அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதால் விடுதலைப் புலிகள் எதிர்க்கட்சித் தலைவர்களுக்குக் குறிவைக்கலாம் என்றும் —

இதற்காக அரசியல்வாதிகளுக்கு பாதுகாப்பு வழங்க அரசு அதிக நிதி ஒதுக்கீடு செய்யும் என்றும் — பிரதமர் தெரிவித்தார்.

தீவிரவாதிகள் தங்கள் அரசியல் நோக்கை அடைவதற்காக வன்செயலை பயன்படுத்தும் வாய்ப்பு உண்டு என்றும் — அதனை முறியடிக்க அனைவரும் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் பிரதமர் தெரிவித்தார். (இ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Prima Hyline Brown பேட்டுக்குஞ்சுகள் உடன் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (28173)

### தேவை

வெற்று எண்ணெய் பரல்களை விற்பனை செய்ய விரும்புவோர் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இல. 10, செம்பியன் லேன், கொக்குவில். (சி-6387)

### நுளம்புத் தொல்லையா?

நமக்கில்லை நுளம்புத் தொல்லை. நாம் இரவில் ''நீம் தூபம்'' புகைத்து நிம்மதியாகத் தூங்குகிறோம். ஒரு பக்கற் விலை ரூபா 3/- மட்டுமே. 25 பக்கற்கொண்ட ஒரு காட் விலை ரூபா 60/-. அண்ணாக் கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. ''மில்க்வைற்'' (சி-6399)

### இலவச திருமண சேவை

33 வயது, திருவாதிரை 3ஆம் பாதம், நட்புப்பெற்ற லக்கினத்துச் செவ்வாயுள்ள பிரான்ஸ் மணமகனுக்கு அழகிய மணமகள் ஐரோப்பிய நாடுகளில் வேண்டப்படுகிறது. இங்கும் வந்து திருமணம் செய்வார். விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோயிலடி. (28172)

## மலேரியா பரவுகிறது

வடமராட்சி, நவ. 26

வடமராட்சிப் பகுதியில் மலேரியா நோய் தீவிரமாக பரவி வருகிறதென சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக புள்ளி விபரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

வடமராட்சி கிழக்குப் பிரிவில் இந்நோய் அதிகரித்து காணப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-173)

---

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி விரிவுரைகள்

## கல்வியாண்டு 1994/95

பின்வரும் பாட நெறிகளுக்கான விரிவுரைகள் **05 - 12 - 1993** இல் ஆரம்பமாகின்றன.

- கலைமாணி **B. A.**
- விஞ்ஞான மாணி **B. Sc.** (புள்ளி விவரவியல்)

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

1993 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: **02 — 12 — 1993**

விண்ணப்பப் படிவத்தினையும் விவரத் திரட்டினையும் ரூபா 10 செலுத்தி நேரில் / தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விவரங்களுக்கு:

உதவிப் பதிவாளர்,
**பட்டப் படிப்புகள் கல்லூரி,**
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

★ கடந்த 15 வருடங்களாக வெளிவாரிப் பட்டப் படிப்புகளுக்கெனத் தனித்துவமாக இயங்கும் ஒரேயொரு நிறுவனம் யாழ். நகரில் இதுவே. [சி-6507]

---

## நவகைடன்ஸ்
யாழ்ப்பாணம்

அளவையியல்
**திரு R.P. சர்மா**

ஆரம்பம்:
**28-11-1993**

குறியீட்டு அளவையியல்
8-30 am.

பகுதி **II**
9-30 am.

(சி/6565)

---

NEW ADMISSIONS FOR THE FULL - TIME

## POST-GRADUATE DIPLOMA IN ENGLISH LANGUAGE TEACHING 1992/93

Applications are invited for the above course from Graduate teachers of English. Applicants should be less than 50 years of age as of 01-01-1994.

A graduate with English as a subject for his/her degree should have a minimum of two years' English Language teaching experience. A graduate without English as a subject should have a minimum of four years' experience.

The relevant application forms can be obtained from the Senior Asst. Registrar Academic after payment of fees of Rs. 10/- at the Finance Branch.

The candidates will be required to sit for a written test and will be summoned for an interview based on their performance in the written test.

Please forward the application through your principal to Senior Assistant Registrar, Academic Branch, University of Jaffna, Thirunelvely before 03-12-1993.

— REGISTRAR.

University of Jaffna.
23-11-1993

(C-6397)

---

மாவீரர் வாரத்தை மாண்புடன் கொண்டாடுவோம்

# விடிவின் வடிவமான ஒளி நாளாக மாவீரர் நாள் துலங்குகின்றது

நவம்பர் 27 ஆம் திகதி. இது தமிழ் மக்களின் வாழ்விலே மிகவும் மகிமை பொருந்திய ஒரு நாளாகும். தமிழீழ தேசிய இனத்தின் உயர்வுக்கு வழிகள் சமைக்கும் நாளாகவும் இது இருக்கின்றது. தமிழீழ மக்களின் அனைத்து உழைப்புகளை, தமிழினத்தின் உன்னத பண்புகளை வெளிப்படுத்தி வைக்கும், வகையிலே ஆற்றிட ஊக்குவிக்கும் இயக்கு சக்தியாகவும் இந்த நவம்பர் 27 ஆம் நாள் இயங்குகின்றது.

தமிழீழ விடிவிற்காக, தம் இன்னுயிர்களை ஈகம் செய்த மாவீரர்களை, அவர்களின் மகத்தான சாதனைகளின் வரலாறுகளை தமிழீழ மக்களுடன் மனித நேயம் படைத்த அனைத்து மக்களும் மனநிறைவோடு நினைவு கொள்ளும் ஏற்றம் மிகுந்த நாளாக நவம்பர் 27 திகழ்கிறது. மாவீரர் நாள் என இந்த நாளுக்கு மேன்மை மகுடம் சூட்டப்பட்டுள்ளது. இந்த நாள் அனைவராலும் புனித நாளாகப் போற்றப்படுகின்றது.

துன்பப் புயலிலே சிக்குண்டு துடித்து நித்தம் துயரப்பட்டுக்கிடக்கும் தமிழீழ மக்களின் அவல வாழ்வு அகன்று, இன்பம் மிகுந்த சந்தோச சுதந்திரவாழ்வை மனதிற்கு இதம் தரும் வகையிலே தமிழ் மக்கள் அடைவார்கள் என்பதை எடுத்துக் காட்டும் விடிவின் வடிவமான ஒளி நாளாகவும் இன்னாள் துலங்குகிறது. இது தமிழீழத்தின் தேசிய நாளாகவும் இருக்கின்றது.

இம் மாவீரர் நாளை அணி செய்யும் வகையிலே மாவீரர் வாரம் கொண்டாடப்படுகிறது. நவம்பர் 21 ஆம் நாள் மாவீரர் வாரம் ஆரம்பமாகியது.

### உந்து சக்தியாக விளங்குகின்றார்கள்

இம்மாவீரர் வார நிகழ்வுகள் மிகவும் சிறப்புடன் கொண்டாடவேண்டிய கடப்பாட்டில் தமிழீழ மக்கள் உள்ளார்கள். இது அவர்களுக்கான ஒரு வரலாற்றுக்கடனாகும். இக்கடன் தமிழீழ மக்களால் நன்கு நிறைவேற்றப்படுகின்றது. தமிழீழ மக்களின் வாரிசுகளாக பிறப்பெடுத்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தங்களை ஆகுதி ஆக்கிக்கொண்ட மாவீரர்கள் இன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும், தமிழீழ மக்களின் வாழ்வியல் உயர்வுக்கும் இறுக்கமான உந்து சக்தியாக விளங்குகின்றார்கள்.

இந்த மாவீரர்களின் சாதனை வரலாறுகள் வரலாற்று ஏட்டில் புதிய புயல் நிகழ்வுகளாக வரைந்தும் வரையப்பட்டும் வருகின்றன. எமது மாவீரர்களின் வரலாற்று உண்மைகளை உணரும் உலக மக்கள், அனைத்து உலக தேசிய விடுதலைப் போராட்டங்களுக்குள்ளே தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தனிச் சிறப்பையும் இனங்கண்டுள்ளனர். மிகப் பெரிய ஈகங்களை ஆற்றி வரலாறு படைத்த மாவீரர்கள் பிறப்பெடுக்கும் தாய் வயிறு தமிழீழ மக்களிடத்தில் தான் உண்டு என உலகோர் இன்று வாய்விட்டுக் கூறுகின்றனர்.

இதனால் எமது விடுதலைப் போராட்டத்தின் நியாய தர்மங்களையும், புயலின் மையமாக நின்று செயல்படும் எமது தலைமைத்துவச் சிறப்பும், மேன்மையும், தமிழீழ மக்களின் தேசிய உணர்வையும், விடுதலைப் போராளிகளின் திறன் நிலைகளையும் உலக மக்கள் நன்கு தெரிந்து கொண்டனர்.

மொத்தத்தில் இன்று தமிழீழ மக்களின் எல்லாவித மான வளர்ச்சி உயர்வுகளுக்கும் மாவீரர்கள் வழிகோலியவர்களாக இருப்பதை நன்கு உய்த்து உணரமுடிகிறது.

தமிழீழ மக்களின் மேன்மையை உயர்த்திய மாவீரர்களின் நினைவாகக் கொண்டாடப்படும் மாவீரர் வார நிகழ்வுகளைச் சிறப்புடன் கொண்டாடுவதன் மூலம் தமிழீழ மக்கள் தங்கள் மேன்மையை இன்னும் உயர்த்திக் கொள்கின்றார்கள்.

### தமிழீழ தேசிய விழா

இவ்விழா தமிழீழ தேசிய விழாவாகும். தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கொண்டாடப்படும் விழாவும் இதுவாகும்.

தமிழினத்தின் புதிய வரலாற்று வாழ்வின் பண்பாட்டு விழாவாகவும் இயல்பாக்கம் பெற்றுவிட்ட மாவீரர் வார விழா மாண்டு, மறைந்து, புதைந்து, வழக்கிழந்து போன தமிழரின் உயரிய பண்பை மீண்டும் வெளிக்கொணர்ந்து அரங்கேறச் செய்த விழாவாகவும் இருக்கின்றது.

நல்லதொரு தலைவன் வழிகாட்டியதால் தலையெடுத்துவிட்டோம், சிறப்புற உயர்கிறோம் பொலிவுற விளங்குகிறோம், மாவீரர் துதிபாடும் தமிழ்ப்பண்பு விழாவை கொண்டாடும் வாய்ப்பும் பெற்று நிற்கிறோம்.

இன்று நள்ளிரவு 12 மணி 1 செக்கனுக்கு எழுப்பப்படும் மாவீரர் நினைவொலியின் போது அனைவரும் எழுந்து நின்று மாவீரர் மௌனவணக்கம் செய்திடுவோம். மாவீரர் நினைவொலி முடிய மாவீரர் நினைவுச் சுடர் ஏற்றுவோம். அனைவரும் விழித்திருந்து இந்நள்ளிரா வேளையில் மாவீரர்களுக்கான இக்கைங்கரிய காரியங்களை மன நிறைவுடன் ஆற்றி, மாவீரர் நாளை உளப்பூரிப்புடன் வரவேற்போம்; கொண்டாடுவோம்.

தேசம் எழுந்திங்கு தன் தோற்றம் காட்டிட
தேகம் எரித்தவர் தூயவிழாத் திறன் காண்போம்.

### மாவீரர் நாள் (நவம்பர் 27)

தேச விடுதலைக்காக மரணித்த
மாவீரர்களுக்கு
தமிழீழ மண்ணில்
மாவீரர் நாள் உறுதிப்பாடாயிற்று.
இவ் எழுச்சி நாளே தமிழீழத்தின் தேசிய
நாளாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.
விடுதலைப் புலி வீரர்களில்
முதலாவதாக வீரச்சாவெய்திய
மாவீரர் சத்தியநாதனின் (சங்கர்) நினைவு நாளை
நவம்பர் 27ஐ
தமிழீழ தேசம்
மாவீரர் நாளாகப் பிரகடனம் செய்துள்ளது.
வருடந்தோறும்
இப் புனித நாளினை
தமிழினம்
உணர்வு பூர்வமாகக் கொண்டாடுகிறது.
நினைவு கூருகின்றது.

---

NEW ADMISSIONS FOR THE FULL - TIME

## DIPLOMA IN ENGLISH LANGUAGE TEACHING 1992/93

Applications are invited for the above course from non-graduate teachers of English. Applicants should be less than 50 years of age as of 1994 - 01 - 01

Candidates should have at least a credit pass in English in G.C.E (O/L) with at least 3 passes in the (A/L), and should have a minimum of five years' English Language teaching experience. Candidates with trained teacher's certificates will also be considered for admission.

The relevant application forms can be obtained from the Senior Asst. Registrar Academic after payment of fees of Rs. 10/- at the Finance Branch.

The candidates will be required to sit for a written test and will be summoned for an interview based on their Performance in the written test.

Please forward the application through your principal to Senior Asst. Registrar, Academic Branch, University of Jaffna, Thirunelvely before 03 - 12 - 1993

— REGISTRAR

University of Jaffna.
23 - 11 - 1993

(C-6396)

---

மாளாத துயரில்—
மாதமொன்று மறைந்தது.....!

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் சுப்பையா சதானந்தன்
(சாந்தம்)
(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் - யாழ். செயலகம்)

உதயம்: **28-01-1932** அஸ்தமனம்: **27-10-1993**

நீங்காத நினைவலைகள்
இனிதாய், இதமாய், நிதமும் பேசி
இயல்பாய் சாந்தம் உருவே யாகி
கனிவாய் வாழும் வாழ்வே யாகி
காலத்தால் அழியா நினைவே யாகி
தனியாய் எம்மைத் தவிக்க வைத்து
தரணி வாழ்வை நீர்த்தீர் சாந்தி!

எமது குடும்பத்தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோர், அனுதாபச் செய்திகள் அனுப்பியோர் அனைவருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்து, இன்று (26-11-93) வெள்ளிக்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள், ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, மதியபோசன உபசாரம் ஆகியவற்றில் கலந்து கொள்ளும்படி மிகப் பணிவுடன் வரவேற்று நிற்கின்றோம்.

நன்றி,
மனைவி: குணபூரணி,
மக்கள்: வரேந்திரன், சுமதி, மாலதி, விஜேந்திரன்,
மருமகன்: திருலோகநாதன்,
சோதரன்: லோகேஷ்.
அறிவிப்பாளர்.

''அம்பாள் அகம்''
6/2, புறாடி முன் வீதி,
கச்சேரி கிழக்கு,
புங்கங்குளம், யாழ்ப்பாணம்.

(28168)

---

யாழ். இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் வழங்கும்

## முழுநிலா அறிவியலரங்கு

இடம். குமாரசுவாமி மண்டபம்
காலம்; 28 - 11 - 1993 ஞாயிறு
4 - 00 — 5 - 00

### " இளமை வளர்ச்சி "

திரு. P. A. C. ஆனந்தராஜா
பணிப்பாளர், சாந்தி அகம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்,
செயலர்.

(சி-6601)

---

யா/மல்லாகம் மகாவித்தியாலயம்

## பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

மேற்படி பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் 28-11-93 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். அனைத்துப் பழைய மாணவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

- அதிபர்.

(சி-2047)

---

## சீட்டிழுப்பு முடிவு

எமது விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டில் பரிசுக்குரியவர்களின் இலக்கங்கள் வருமாறு:-

1 ஆம் பரிசு இல. **3665** 2 ஆம் பரிசு இல. **8051**
3 ஆம் பரிசு இல. **8707**

ஆறுதல் பரிசுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 3695 | 8367 | 6364 | 5396 | 9097 |
| 4731 | 0816 | 8617 | 3026 | 1188 |

எதிர்வரும் 28-11-93 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு எமது செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

— நிர்வாக உறுப்பினர்.

(28175)

---

## உணவு தயாரிப்பாளர் தேவை

சமையல் வேலைகள் யாவும் பொறுப்புடன் செய்யக் கூடியவர் தேவை.

ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.

தங்கியிருந்து பணியாற்றக் கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விரும்புவோர் நேரில் சமுகம் தரவும்.

காலம்:- **27-11-93** மு.ப **8.00** - பி.ப **4.00** வரை
**28-11-93** மு.ப **10.00** - பி.ப **4.00** வரை

35, மார்ட்டின் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(C/6566)

---

## அறிவித்தல்

### உடுவில் மகளிர் கல்லூரி

6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம், 10ஆம் ஆண்டுகளுக்கான பரீட்சை **29—11—1993** ஆரம்பமாகும்.

நேர அட்டவணையை பாடசாலை அலுவலகத்தில் பார்க்கவும்,

- அதிபர்

(சி/6603)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## அம்பலமாகும் காரணங்கள்

வடக்கு - கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் உடனடியாகப் பேச்சுக்களை நடத்த வேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில், நேற்று முன்தினம் புதன்கிழமை, பல குரல்கள் ஒலித்திருக்கின்றன. இந்தக் கோரிக்கையை - கருத்தை - முன்வைத்தவர்களில் ஆளுங்கட்சியிலிருக்கும் உபசபாநாயகரான காமினி பொன்சேகாவும் ஒருவர்.

ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒருவரிருவரின் கருத்தை அரசாங்கத்தின் நிலைப்பாடாகக் கொள்ள முடியாது.

ஜனாதிபதியும் அமைச்சர்களும் வடக்கு - கிழக்கு யுத்தத்துக்கு இராணுவத் தீர்வையே நாடி நிற்கிறார்கள். இராணுவத் தீர்வு என்றால் பேச்சுவார்த்தைக்கு இடமில்லை. களத்தில் போராடும் இரு தரப்பினர்களதும் வெற்றி தோல்வியிலேயே இராணுவத் தீர்வின் பெறுபேறு — முடிவு — தங்கியுள்ளது.

தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு உகந்ததல்ல. அரசியல் தீர்வே சரியானது என்ற கருத்திலேயே உபசபாநாயகர் பேச்சு வார்த்தைக்கான கோரிக்கையை முன் வைத்தார் என்று கூறிவிடமுடியாது.

விடுதலைப் புலிகளின் கையில் இராணுவத்தினர்— சிங்கள இளைஞர்கள் — மடிந்தொழிகிறார்கள். அதனை தொடர அனுமதிக்கக் கூடாது. சிங்களச் சிப்பாய்கள் மாண்டுபோவதைத் தடுப்பதற்கு ஒரே மார்க்கம் யுத்தத்தை நிறுத்துவதுதான். யுத்தத்தை நிறுத்துவதற்கு உள்ள வழி பேச்சுவார்த்தை ஒன்றே. இதனை மனதிற்கொண்டே, காமினி பொன்சேகா, பேச்சுவார்த்தை குறித்துப் பிரஸ்தாபித்திருக்க வேண்டும்.

சிங்களச் சிப்பாய்களின்— கிராமத்துச் சிங்கள இளைஞர்களின்— மீது ஏற்பட்ட கரிசனையாலேயே உபசபாநாயகர் ஜனாதிபதிக்கும் அரசுக்கும் முரணான நிலைப்பாட்டை எடுத்திருக்கிறார் எனலாம்.

தனக்குச் சரியெனப்படுவதை வெளிப்படையாகக் கூறும் துணிச்சல்காரர் பொன்சேகா. அதனைச் செயற்படுத்தவும் பின்னிற்பதில்லை. அண்மையில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கொண்டு வந்த பிரேரணையை ஆதரித்து வாக்களித்தவர் அவர். அதனால் அரசாங்கக் கட்சிக்குள்இருக்கும் ஒரு புரட்சிவாதியாகக் கருதப்படுகிறார். சர்ச்சைக்குரியவருமாகி உள்ளார்.

இத்தகைய பின்னணியில் பார்க்கும்போது, திரு. பொன்சேகா தமிழர் விவகாரம் சம்பந்தமாக அரசாங்கத்துக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்திருக்கவும் கூடும் என்று எண்ண இடமுண்டு. எது எப்படியோ, பாதுகாப்புச் செலவின ஒதுக்கீடு சம்பந்தமான விவாதத்தில் அவர் கூறிய கருத்துக்கள் சிங்களப் பேரினவாதத்தை அம்பலப்படுத்துவதாக அமைந்திருக்கின்றன.

மதகுருமார் தமது கடமைகளைச் செய்யட்டும். அரசியல் வாதிகளாகிய நாம் எமது கடமைகளை உணர்ந்து செயற்படுவோம். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். போருக்கான மூல காரணத்தைக் கண்டறிந்து அது தீர்க்கப்பட வேண்டும். மதகுருமாருக்கு அஞ்சித் தீர்வைப் பின்போடலாமா? இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண உடன்பட்டால், அடுத்து வரும் தேர்தலில் தோற்றுவிடுவோம் என்று எண்ணுவது சரியான அணுகுமுறையாகுமா? — என்ற அவரது பேச்சு தமிழர் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதற்கான காரணங்களை — நாம் அடிக்கடி இப்பத்தியில் கூறிவந்த காரணங்களை — உறுதிப்படுத்துகின்றன.

ஆனால் அவர் ஒருவராக நின்று எதனைச் சாதிக்க முடியும்?

# பாகிஸ்தான் - இந்தியா காஷ்மீர் குறித்து பேச்சு!

## இருதரப்பும் கூட்டாக அறிவிப்பு

புதுடில்லி, நவ. 26

காஷ்மீர்ப் பிரச்சினை குறித்துத்தாம் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக இந்தியாவும் பாகிஸ்தானும்இணைந்து கூட்டாக அறிவித்துள்ளன.

ஜனவரி முதலாம் திகதி பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்தில் இப் பேச்சுவார்த்தை ஆரம்பமாகவுள்ளது.

மூன்று நாள் நடைபெறவுள்ள இப் பேச்சுகளில் இந்தியத் தரப்பில் வெளியுறவுச் செயலாளர் ஜே. என். டிக்ஸிற்றும்— பாகிஸ்தான் தரப்பில் வெளியுறவுச் செயலாளர் ஷக்கரியாக்கானும் கலந்து கொள்வார்கள் என்றும் கூட்டறிக்கை கூறுகின்றது.

ஐ. நா. சபையில் இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் கொண்டுவரத் திட்டமிடப்பட்டிருந்த பிரேரணையை பாகிஸ்தான் இறுதி நேரத்தில் கைவிட்டு விட்டதால் மீண்டும் இரு நாடுகளும் நேரடியாகப் பேச்சு நடத்தும் சூழ்நிலை உருவானதாக நம்பப்படுகிறது.

கடந்த பதினைந்து மாதங்களில் நடைபெறவிருக்கும் முதலாவது சமாதானப் பேச்சுவார்த்தை இது என்றும்—

பெனாஸிர் பூட்டோ பிரதமரான பின்னர் நடைபெறவிருக்கும் முதலாவது பேச்சும் இதுவே என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னர் ஆறு தடவைகள் இந்தியாவும் பாகிஸ்தானும் காஷ்மீர் தொடர்பாகப் பேச்சுகளை நடத்தி உள்ளன. (த- எ)

## கிராமிய வங்கியில் ஓய்வூதியம்

தென்மராட்சி, நவ. 26

சாவகச்சேரி, கொடிகாமம் கிராமிய வங்கிகளில் ஓய்வூதியம் பெறுவோருக்கான நவம்பர் மாத ஓய்வூதியம் தற்போது வழங்கப்படுகிறது. [த-117]

## வீரவன்னி சு.கவில் இணைவு

கொழும்பு, நவ. 26

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஆரம்பகால உறுப்பினரான வியலுவ நாடாளுமன்றத் தொகுதியின் முன்னாள் எம்.பி. வீரவன்னி சமரவீர சுதந்திரக் கட்சியில் சேர்ந்து கொண்டார்.

இவர் தற்போது வியலுவ தொகுதியின் சுதந்திரக்கட்சி அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ. தே. க. அரசிலும் இவர் பல அமைச்சர் பதவிகளை வகித்துள்ளார் (ஒ-எ-6)

## மாவீரர் எழுச்சி வார வேலைத் திட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 26

மாவீரர் எழுச்சி வாரத்தை ஒட்டி வட்ட ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத் திட்டங்களில் இன்று நடைமுறைப்படுத்தப்படும் வேலைத் திட்டங்கள் பற்றிய விவரம் வருமாறு;

நல்லூர் வட்டம்— காலை 9 மணிக்கு திருநெல்வேலி மத்தி தெற்கு வாலையம்மன் சனசமூக நிலைய வீதி துப்புரவு செய்தலும் மர நடுகையும் பிற்பகல் 2.30 மணிக்கு கந்தர்மடம் தென்மேற்கில் நீராவியடி சனசமூக நிலைய வீதி துப்புரவு செய்தலும் மரநடுகையும்.

சங்கானை வட்டம்— காலை 9 மணிக்கு சுழிபுரம் கிழக்கில் பறாளை வீதி துப்புரவு செய்தல், வட்டு தென் மேற்கில் மரம் நடுகை செய்தல். (த)

# குண்டுத் தாக்குதலில் சிதறிய வீடுபோல் காட்சியளித்த பூநகரி கூட்டுத்தளம்!

*பூநகரி கூட்டுத்தளம் மீது விடுதலைப் புலிகள் கடந்த 10 ஆம் திகதி மேற்கொண்ட தாக்குதல் குறித்து, விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடான விடுதலைப் புலிகள் பத்திரிகையின் கார்த்திகை மாத இதழில் வெளியான கட்டுரை இங்கு மறு பிரசுரமாகின்றது.*

**10 - 11 - 1993** நள்ளிரவு கடந்த நிலையில் பூநகரி கூட்டுத்தளம் மீது புலிகள் நடத்திய பிரமிப்பூட்டும் பாரிய தாக்குதலில், பல நாற்றுக் கணக்கான சிங்களப் படையினர் பலியாகிவிட்டனர். தாக்குதலை வெற்றிகரமாக முடித்துவிட்டு, கைப்பற்றிய ஆயுத தளபாடங்களுடன் புலிகள் வெளியேறியபின் பூநகரி கூட்டுத்தளம், சுப்பசொனிக்கின் குண்டு வீச்சுக்கு இலக்கான வீடுபோலச் சின்னாபின்னமாகிக் கிடந்தது. கொல்லப்பட்ட படையினரது எண்ணிக்கை ஏறக்குறைய ஆயிரமாக இருக்கலாம் என்று, உலகச் செய்தி நிறுவனங்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளன. இப்பெரும் தாக்குதலில் புலி வீரர்கள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களின் எண்ணிக்கை, சிங்களப் பேரினவாதிகளைக் கனவிலும் அச்சுறுத்தக்கூடிய அளவுக்குப் பெருந்தொகையானதாகும்.

ஆயுதப் போரில் சடுதியான திருப்பத்தையும், விடுதலைப் போராட்டத்தில் ஒரு புதிய பரிமாணத்தையும் ஏற்படுத்தியுள்ள இப்பெரும் தாக்குதல், புலிகள் இயக்கத்தின் பலத்தையும் ஆற்றலையும் அளவிடும் ஒரு தராசாகவும் அமைந்துவிட்டது.

### இருவழித் தாக்குதல்

ஒரே சமயத்தில் தரைமூலமும் - கடல்மூலமுமான தாக்குதல் திட்டங்களையும்,அதே வேளை தரையிலும்- கடலிலுமான சண்டைகளையும் கொண்ட இப்பெரும் தாக்குதலுக்கு, ஈருடக உயிரினமான தவளையின் பெயர் சூட்டல் பொருள் பொதிந்ததாக அமைந்துள்ளது.

கடற்புலிகளின் சிறப்புத் தளபதி திரு. சூசை கடல் நடவடிக்கைகளை வழி நடத்த, மூத்த தளபதி திரு. சொர்ணம் தரை நடவடிக்கைகளை வழி நடத்த, இவை இரண்டையும் ஒருங்கிணைத்து இப்பெருந்தாக்குதலை மூத்த தளபதி திரு. பொட்டு அவர்கள் செயற்படுத்த, தலைவர் பிரபாகரன் அவர்கள் இந்நடவடிக்கையை நெறிப்படுத்தித் தலைமை வகித்தார்.

இப்பெருந் தாக்குதலில் முல்லை, வன்னி, மன்னார், யாழ்ப்பாணம் என்று வட தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களினதும் சிறப்புத் தளபதிகளும், மகளிர் படையணியின் சிறப்புத் தளபதியும் அணித் தலைவர்களாகக் கலந்து கொண்டு தாக்குதலில் பங்கேற்றனர். இதில் முல்லை மாவட்ட சிறப்புத் தளபதி லெப். கேர்ணல் அன்பு வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். அதே வேளை மட்டக்களப்பு — அம்பாறை மாவட்டத்தின் பெரியதொரு படையணி தளபதி கருணா தலைமையில் இத்தாக்குதலில் முக்கிய பங்கேற்று சிறப்பாகப் பணியாற்றியுள்ளது.

இந்த ஈருடகத் தாக்குதலில் கடற்புலிகளின் பங்கும் பணியும் குறிப்பிடும்படியாக இருந்தது. கடற்படையின் நகர்வுகளையும் அதன் அசைவியக்கத்தையும் தடுத்து நிறுத்திய தளபதி சூசையின் தலைமையிலான கடற்புலிகள், இம்முகாம் தாக்குதலின் வெற்றிக்குப் பெரும் பங்காற்றினர். கடற்கரும்புலிகள் மேஜர் கணேஸ், மேஜர் கோபி ஆகியோர் இதற்கு உறுதுணையாக உரம் சேர்த்துவிட்டு வீரச்சாவடைந்தனர்.

பூநகரி கூட்டுத்தளத்தின் பூகோள அமைவிடம் சிங்களப் படைக்குச் சாதகமாகவே உள்ளது என்பது வெளிப்படை. கடற்படையின் துணையும், வான்வழி உதவிகளை சுலபமாகப் பெறக் கூடிய நில அமைப்பும், பெரும் எடுப்பிலான கெரில்லாத் தாக்குதலுக்குச் சாத்தியமற்ற ஒரு நிலப்பரப்பையும் கொண்ட ஒரு பிரதேசமாகவே பூநகரிப் பகுதி இருந்தது. இதனால் புலிகள் ஒரு பெரும் தாக்குதலை பூநகரி கூட்டுத்தளம் மீது நடத்தத் துணியமாட்டார்கள் என்றும், அவ்விதம் நடத்தினாலும் கலபமாக அதை முறியடித்து விடலாம் என்றும் படையினர் எண்ணியிருப்பர். ஆனால் புலிகளின் தலைமை தயாரித்த சிறப்பான தாக்குதற் திட்டங்களும் — அதற்கே உரிய தந்திரோபாயங்களும், புலிவீரர்களின் அபாரமான துணிச்சலும் — போர்த்திறனும் புலிகள் இயக்கத்திற்கு ஒரு பெரிய வெற்றியைத் தேடிக் கொடுத்துவிட்டன. இப்பெரு வெற்றியானது தமிழீழ மக்கள் மத்தியிலும், சிங்கள தேசத்திலும், சர்வதேச சமூகத்திலும் பல தாக்கங்களையும் — மாற்றங்களையும் ஏற்படுத்தும் என்பது உறுதி.

### சர்வதேசத் தாக்கம்

குடாநாட்டைச் சூழ இடப்பட்ட முற்றுகை வலையை இணைக்கும் பிரதான முடிச்சுக்களில், பூநகரி கூட்டுத்தளம் முக்கியமானது. கடற்படை, தரைப்படை என்று ஏறக்குறைய 1500 பேரைக் கொண்டிருந்த பிரமாண்டமான தளம் அது. 17-10-91 அன்று மண்டைதீவிலிருந்து படையெடுத்து வந்த சிங்கள இராணுவம் பூநகரியில் ஒரு முகாமை நிறுவி, கேரதீவு-சங்குப்பிட்டி பாதையைத் தடைசெய்தது. அதன் பின்னர் 28-6-92 அன்று கொம்படி-ஊரியான் பாதையும் இராணுவ நடவடிக்கை ஒன்றின் மூலம் தடைசெய்யப்பட, கிளாலி கடல் நீரேரி போக்குவரத்துப் பாதையாக மாறியது. இந்தக் கடல் நீரேரிப் பயணத்தைத் தடைசெய்ய நாகதேவன் துறையை உள்ளிட்ட ஞானிமடத்தில் ஒரு கடற்படைத் தளத்தை அரசு நிறுவியது. இக் கடற்படைத் தளத்தைச் சேர்ந்த படையினர், பிரயாணிகளின் படகுகளை வழிமறித்துத் தாக்கி, சுமார் 350 பேரை படுகொலை செய்திருப்பது நினைவு கூரத்தக்கது.

### பலமான தளம்

நவீன 'ராடர்' சாதனங்களுடன் கூடிய இக் கடற்படைத் தளத்தையும், ஞானிமடத்திலிருந்து கௌதாரிமுனை வரையுள்ள நிலப்பகுதியை ஆக்கிரமித்தபடி சுற்றிவர 25 கி. மீ. நீளமான இராணுவ வேலியையும் கொண்டதாக, இந்தக் கூட்டுத்தளம் அமைந்திருந்தது.

ஞானிமடத்திலிருந்த பெரிய கடற்படை முகாமுடன், மேலும் ஆறு இராணுவ முகாம்களையும் அவற்றுடன் கூடிய பல மினி முகாம்களையும் - [illegible] காவல் அரண்களையும் இவை எல்லாவற்றையும் இணைத்த ஒரு நீண்ட இராணுவ வேலியையும் கொண்ட ஒரு பலமான தளமாக, பூநகரி கூட்டுத்தளம் விளங்கி வந்தது.

இந்தக் கூட்டுத்தளம் மாவீரர் நாளுக்கு முன்னர் புலிகளால் தாக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பை, சிங்களப் படைத்துறை ஏற்கனவே வெளியிட்டிருந்தது. ஆனாலும் ஒரு பூகம்பத்தைப் போல இவ்வளவு பிரமாண்டமானதாக அந்தத் தாக்குதல் அமையும் என்பதை, சிங்களப் படையினர் எண்ணியிருக்க மாட்டார்கள்.

1990ஆம் ஆண்டு தீபாவளி தினத்தன்று, சிங்கள இராணுவம் வசாவிளான் பகுதியை நோக்கிப் படையெடுத்து வந்தது.

''தீபாவளியை படையினர் வெடிகொளுத்திக் கொண்டாடினர்'' என்று அந்த இராணுவ நடவடிக்கையை, ரஞ்சன் விஜேரத்னா சிலேடையாக விபரித்தார்.

ஆனால் 1993ஆம் ஆண்டு, டாங்கிகளையும், நீருந்து விசைப்படகுகளையும் பிடித்து விளையாடி, கைப்பற்றப்பட்ட வெடிப்பொருள்களுக்குள்ஒளித்துவிளையாடிபுலிகள் தீபாவளியைக் கொண்டாடினார்கள் என்ற செய்தியை அறிய, ரஞ்சன் விஜேரத்னா இன்று உயிரோடில்லை.

பூநகரி கூட்டுத்தளத்தில் சிங்களப்படை சந்தித்த பேரிழப்பு, சிங்கள மக்களை அதிர்ச்சிக்கும் அச்சத்திற்கும் உள்ளாக்கியுள்ளது. அதே வேளை சிறிலங்கா அரசு மீதும் படைத்துறைத் தலைமைமீதும் சிங்கள மக்கள் கோபமடைந்துள்ளனர்.

''வருகின்ற ஜனவரிக்குள்/ மார்ச்சுக்குள் எல்லாம் முடிந்துவிடும். புலிகள் அழிக்கப்பட்டு விடுவர்'' என்ற எதிர்பார்ப்புடன் இருக்க வைக்கப்பட்ட சிங்கள மக்களுக்கு, பூநகரி படை முகாமின் கதி பேரிடியாக விழுந்துள்ளது.

சிங்களப்படையின் வரலாற்றில் இத்தகைய ஒரு பேரழிவை அது சந்தித்ததேயில்லை! அத்துடன் உலக இராணுவக் குறிப்பேடுகளில் ஓர் ஆவணமாகப் பொறிக்கப்படும் அளவுக்கு, ஒரு 'கின்னஸ்' சாதனையாகவும் இப் பெருந்தாக்குதல் மாறிவிட்டது.

தாயக விடுதலைக்காகப் போராடும் ஒரு கெரில்லா இயக்கம், ஓர் அரச இராணுவ நிலை மீது கெரில்லா முறை மூலம் பெரும் தாக்குதலை நடத்தி, இவ்வளவு தொகையில் அரச படைகளைக் கொன்று, அவர்களின் ஆயுதங்களையும் கைப்பற்றியதாக வரலாறே இல்லை. அந்த உலக சாதனையை புலிகள் இயக்கம் படைத்துள்ளது. இப்பெரும் சாதனை மூலம், விடுதலைப் போராட்டம் வெல்லப்பட்டுவிடும் என்ற நம்பிக்கையை தமிழீழ மக்களும் பெற்றுள்ளனர். ★

## அடிதொடரத் திரண்டு விட்டோம்

பல்லவி

இளமையின் கனவெல்லாம் கலைத்தவரே - வளர்
இளமையைக் களம்சென்று கரைத்தவரே - அன்று
..........(இள......)

அனுபல்லவி

தாயகக் கனவினிலே திளைத்திருந்தீர் - தங்கத்
தாயகக் கனவுடனே எமைப்பிரிந்தீர் - பொங்கும்
..........(இள......)

சரணம்

உங்களின் புகழ்பாடித் துடித்துநிற்போம் - தினம்
உங்களின் திறம்பாடி வியந்துநிற்போம் - உடன்
உங்களின் பணிமுடிக்கத் துணிந்துவிட்டோம் -
என்றும்
உங்களின் அடிதொடரத் திரண்டுவிட்டோம் -
அன்றே
..........(இள......)

— சரவணன்.

## சிந்தை மகிழ்ந்து வாழ்த்துவமே!



கூடலில் ஆய்ந்த தீந்தமிழை
கொற்றவர் போற்றிய நற்றமிழை
தேடற்கரிய சுவை தரும்
செந்தமிழ் பைங்கூழ் கலந்துவந்து
நாடற்கரிய பா மணக்கும்
நற்றமிழ் பனுவல் அணிசேர
கோடற்கரிய அறம் தழுவி
குவலயம் எங்கும் எழில்பூத்த
பாடற் கரிய சிறப்புடைய
பைந்தமிழ் அணங்கு பார்மீதில்
நிலைபெற் றோங்கிட நானிலத்தில்
நிகழ்த்திடும் தியாகங்கள் நீண்டதொரு
மலையாய் குவிந்திட மண்மீட்க
அலையாய் திரண்டிடும் ஆடவரும்
நிலையில் இகழ் வாழ்வதனை
எங்கள் தேசம் மலர்ந்திடவே
நிலையாய் வடிவம் தாங்கிடவே
செங்களம் ஆடி மகிழ்ந்தனரே
அகத்தோடு புறமும் இலக்கியமாய்
அமைந்த தமிழின் சிறப்பதனை
தகவுடைய வீரர்குழாத் திடையே
தன்னணி சான்ற விறலுடனே
இகழுடையா ரவர் பகைமுடித்து
இன்றமிழ் ஈழம் கண்டிடவே
அகமது தோய்ந்த இலட்சியத்தில்
அறமது போற்றும் இளவேந்தாய்
நாற்றிசை மணக்கும் புகழுடனே
நண்ணிடும் சோதனை பலவாகி
சாற்றரும் தொல்லைகள் மத்தியிலும்
சாதனை இயற்றிடும் ஏந்தல்களும்
போற்றிடும் பேறுயுடைப் பெருந்தலைவ
மாற்றவர் நின் பதம் பணிந்திடவே
மலர்ந்திடும் தமிழீழம் கண்டினிதுநீ
மனையறம் காத்து வாழ்ந்திடவேநின்
மண்ணக வாழ்வு சிறந்திடவே
தினைப் பொழுதேனும் தவறாது
சிந்தை மகிழ்ந்து வாழ்த்துவமே!

— கே. சி. சிவசுப்பிரமணியம்

## தலைவன் புகழ் தாரணியில் என்றுமே வாழியவே

| | | |
|---|---|---|
| மண்ணுற்று | வந்தவர், மகிமையைப் | அவதார மானவர், புறங்கண்டவன்; |
| தன்னுற்ற | தமிழினத் தலைமீது | தன்மான உணர்வினைத் தான்கொண்டவன்; |
| எண்ணற்ற | எம்மவர் ஏறுபோற் | இன்னலைத் தீர்க்கவே களம்சென்றவன்; |
| வண்ணத்து | மிடுக்குடன் வரிப்புலிப் | தமிழீழ மண்ணிலே படைதந்தவன்; |
| முன்னுற்ற | முடியுடை முற்றிய | மூவேந்தர் தம்மிலும் உரம்பெற்றவன்; |
| பின்னுற்ற | இளைஞர்கள் பீடுடன் | யுவதியர் தங்களைப் எழவைத்தவன்; |
| விண்ணிற்று | வீழினும் விடுதலைக் | வீரமும் உறுதியும் கெனநிற்பவன்; |
| எண்ணுற்று | வாழ்த்துவோம்; என்றுமே | இவன்புகழ் தரணியில் வாழியவே! |

-முருகனடியான்.

## சோழர்வழிச் சோதியே! போற்றி!

தளபதியாய் மக்களுன்னைத் தம்மனத்தில் வரித்திருக்க
களமதிலே பெருவீரக் கனலாகி — வளமான
ஈழமண்ணில் எதிரிகளை இல்லாது விரட்டிவரும்
சோழர்வழிச் சோதியே! போற்றி!
புயலுக்குமறுசொல் நீயெனும் புதுப்பெயரை -
எடுத்தாய்;
அயல்நாடு நடுநடுங்கி அலறிபோடிட - சுயமான
ஈழத்தின் வெற்றிக்காய் இடியாக முழக்கமிடும்
சோழர்வழிச் சோதியே! போற்றி!

புலியென்னும் பேரினைப் புவியெங்கும் நிலைநாட்டி
கிலிகொள்ளும் எதிரிகளைக் களம்வென்று - வலிமையுறு
தளமெங்கள் தமிழீழம் தானென்று முரசறையும்
சோழர்வழிச் சோதியே! போற்றி!

கரும்புலிகள் எனுமரிய காவியத்தைத் தொடங்கிநீ
இரும்பான உறுதியுடன் இருக்கின்றாய் - வரும்பகைவன்
தாழும் தலைகளை... நாளும் தகர்த்தெறியும்
சோழர்வழிச் சோதியே! போற்றி!

— கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன்

## விடிவெள்ளியாக நின்றான்

அஞ்சாத நெஞ்சத்தில் உறுதி கொண்டோன்
அசையாத இலட்சியத்தில் பற்றுடையோன்
துஞ்சாது மக்களுக்காய் விழித்திருப்போன்
துன்பத்தில் ஒன்றிணைந்து கைகொடுப்போன்
எஞ்ஞான்றும் பகைவர்களின் செயலுணர்வோன்
எதிர்த்தவரை மடக்கியுரு அழித்து நிற்போன்
மெஞ்ஞான நெறியினின்று ஒழுக்கங்காப்போன்
மேதினியில் எம்தலைவர் நீடு வாழ்க!

தமிழினத்தின் துயர்துடைக்கத் தோன்றிநின்றான்
தானைக்குத் தளபதியாய் முன்னே சென்றான்
இமைப்பொழுதில் எதிரிகளை அடித்து வீழ்த்தும்
ஈடில்லாப் போர்க்கலையில் விஞ்சி நின்றான்
இயமனாம் சிறிலங்கா இராணுவத்தின்
திமிரடக்கும் திறமை கொண்டோன்
அமைதியின்றி வாழுகின்ற மக்களுக்கு
வானத்தின் விடிவெள்ளியாக நின்றான்!

— ஆ. சவரிப்பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர்களின் பெற்றோர்கள் பல இடங்களில் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 26

மாவீரர்வார ஐந்தாம் நாள் நிகழ்வுகள் நேற்று மழையின் மத்தியிலும் எழுச்சியுடன் நடைபெற்றன. மாவீரர் நினைவுப் பந்தல்களில் காலை முதல் மாலை வரை மக்கள் பெரும் எண்ணிக்கையில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு முன் மக்கள் தீப மேற்றி, தூபம் போட்டு, மலர் வைத்து, வணங்கி அஞ்சலி செலுத்தும் காட்சிகளை நினைவுப் பந்தல்களில் நாள் முழுவதும் காண முடிந்தது.

மாவீரர் வாரத்தையொட்டி நேற்றுப் பல இடங்களிலும் மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மாவீரர் நினைவாக வீதிகளுக்குப் பெயர் சூட்டும் வைபவங்களும் நடைபெற்றன.

மாவீரர் நிகழ்வுகளை முன்னிட்டு வல்வெட்டித்துறையில் சிகரம் கட்டப்பட்டுள்ளது. இச் சிகரத்தில் இரவு நேரங்களில் வர்ண விளக்குகள் எரிக்கப்படுகின்றன.

மாவீரர் தினத்தையொட்டி பருத்தித்துறை வட்டவைப் பகுதியில் நேற்று ஒன்பது வீதிகளுக்கு மாவீரர்களின் பெயர்கள் சூட்டப்பட்டன.

சுன்னாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் கூடத்தில் காலை தொடக்கம் இரவு பத்து மணி வரை மக்கள் அஞ்சலி இடம் பெறுகிறது.

கந்தரோடையில் உள்ள தெப்பக்குளத்தில் மாவீரர் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்ட வள்ளம் ஒன்று அலங்கார விளக்குகளுடன் ஓட விடப்பட்டிருக்கிறது.

மாவீரர் நாளை முன்னிட்டு அச்சுவேலி, புத்தூர், நீர்வேலிப் பகுதிகளில் பல்வேறு விதமான அலங்கார வளைவுகள், வீதி அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன.

அச்சுவேலி தபால் நிலையம், அச்சுவேலி ஆஸ்பத்திரிச் சந்தி, வல்லை நேர் றோட் மதவடி, ஆவரங்கால்ச் சந்தி, ஆவரங்கால் சந்தை புத்தூர் வங்கியடி, புத்தூர்ச் சந்தி, சிறுப்பிட்டிச் சங்கத்தடி, சிறுப்பிட்டி சனசமூக நிலையத்தடி, நீர்வேலிச் சந்தி ஆகிய இடங்களில் உள்ள வீதி வளைவுகளில் தமிழீழப் போராட்டம் தொடர்பான காட்சிகளும் இராணுவத் தோல்விகள் தொடர்பான சித்திரங்களும் வரையப்பட்டுள்ளன.

மாவீரர் வாரத்தையொட்டி மிருசுவில் கெற்பலியில் தென்மராட்சி பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் பத்து ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்ட மாவீரர் சோலை நேற்று முன்தினம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் ரவி அண்ணாவினால் திறந்து வைக்கப்பட்டது.

(அ-15-17-173-89-11-117-30)


## அறிவித்தல்

நவம்பர் 27 மாவீரரை நினைவு கூரும் நன்னாளில் எமது கிளை நிலையங்களில் கொள்வனவு நடவடிக்கையை மட்டும் நடைமுறைப்படுத்திக்கொண்டு தங்கள் பிரதேசங்களில் நடைபெறும் மாவீரர்களின் நினைவு நாள் வைபவங்களில் அனைவரும் உள உணர்வுடன் கலந்து கொண்டு அவர்களின் கனவுகளை நனவாக்குவதற்கு உறுதிகொள்வோம்.

தலைவர்

வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசம்

(சி 6605)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

கணனி கல்வி நிலையங்களுடன் இணைந்து நடத்தும்

## கணனி, இலத்திரனியல் கண்காட்சி

1993 நவம்பர் 10 ஆம், 11 ஆம், 12 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கென விளம்பரப்படுத்தப்பட்டு 10 ஆம் திகதியுடன் இடைநிறுத்தப்பட்ட மேற்படி கண்காட்சி, மீண்டும் 1993 டிசம்பர் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடத்தப்படுமென்பதை அறியத் தருகின்றோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**பிரவேசம்: ரூபா 10/-**

**சிறுவர்களுக்கு: ரூபா 5/-**

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

[சி-6608]

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை

சந்தை, இறைச்சிக் கடைகள்

## கேள்வி அறிவித்தல்

**01-11-1993** ஆம் திகதி உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலின் பிரகாரம், தவிர்க்கமுடியாத காரணத்தால் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

ஆகவே மீண்டும் **06-12-1993** ஆம் திகதிக்கு கேள்விகள் திறக்கப்படும் என்பதையும் **03-12-1993** ஆம் திகதி வரை எவரும் கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாமெனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பம்:
இ. ஐயாத்துரை
விசேட ஆணையாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை.
22-11-1993

(சி/6607)


## மரண அறிவித்தல்கள்

### முருகேசு கணபதிப்பிள்ளை

மறவன்புலவு வள்ளக்குழிப்பிள்ளையார் ஆலய தர்மகர்த்தாவும், இளைப்பாறிய யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியரும், முன்னைநாள் ஸ்ரீகாந்தா அச்சகம், புத்தகசாலை உரிமையாளரும், சமாதான நீதிவானும், வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த தங்கம்மாவின் அன்புக் கணவருமாகிய முருகேசு கணபதிப்பிள்ளை வெள்ளிக்கிழமை 19-11-1993 சென்னையில் இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் சறோஜினிதேவி, சச்சிதானந்தன், சாந்தாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசுப்பிரமணியம், இராசேஸ்வரி, இரகுநாதமுதலியார் ஆகியோரின் அன்பு மாமனும், சிற்சபேசன் சிவநங்கை, கயல்விழி, சிவகாமி, முருகவேள், பிஞ்ஞகன், தில்லைக்கண்ணன், அங்கையர்க்கண்ணி, பங்கயர்ச்செல்வி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் சென்னையில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
அ. பரமகுருநாதன்,
பெறாமகன்.

21/3 சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

(6817)

### சி. சந்திரசேகரம்
(ஓவசியர் - R.D.A)

இணுவில் மேற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி சந்திரசேகரம் (முன்னாள் P.W.D ஓவசியர்) 25-11-93 அன்று காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், பாலகிருஷ்ணன் (வரதன் - மின்னியலாளர், மஸ்கன் அஸ்பஸ்ரஸ் தொழிற்சாலை, ஈவினை), சந்திரமோகன் (அம்பிகா டிஸ்பென்சரி, சாவகச்சேரி), சந்திரகுமார் (ரூபன்), திருமதி சந்திரகௌரி சிற்சபேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும்; செல்லத்துரை, ஏழாலை மேற்கைச் சேர்ந்த சிற்சபேசன் (மின்னியலாளர்-காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 25-11-93 (வியாழக்கிழமை) தாவடி மயானத்தில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

இணுவில் மேற்கு,
இணுவில்.

(6731)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

## விஞ்ஞான பீடம்

மாணவர்களை பதிவு செய்தல் - 1992/93 கல்வியாண்டு

1. புதிதாக விஞ்ஞான பீடத்திற்கு அனுமதி பெற்ற மாணவர்கள் 1993-12-09, 1993-12-10 ஆகிய திகதிகளில் பின்வரும் ஆவணங்களுடன் நேரில் வந்து யாழ். பல்கலைக்கழகத்திலே பதிவு செய்யுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.
   - அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அனுப்பப்பட்ட அனுமதிக் கடிதம்
   - ஆ) பிறப்புச்சான்றிதழ் (மூலப்பிரதி)
   - இ) பாடசாலை விடுகைப் பத்திரம்
   - ஈ) 8 புகைப்படங்கள்- 2'' X 2½''
   - உ) தேசிய அடையாள அட்டை
   - ஊ) கட்டணம் - ரூபா 305/-

★ தேவையான விண்ணப்பப்படிவங்கள் உதவிப் பதிவாளர், யாழ். பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.

2. 1991/92 கல்வியாண்டு அனுமதி பெற்றுத் தமது படிப்பை 1992/93 கல்வியாண்டிற்குப் பிற்போடுவதற்கு அனுமதி கிடைத்தவர்கள் தங்களது பதிவை உடனடியாகப் புதுப்பிக்க வேண்டும்.
3. முதலாம் வருட வகுப்புக்கள் 1993-12-20 இல் ஆரம்பமாகும்.
4. இரண்டாம், மூன்றாம், நான்காம் ஆண்டிற்கான வகுப்புக்கள் 1993-12-06 இல் ஆரம்பமாகும்.

— பதிவாளர்.

(சி 6602)


# கோபாலசாமியும் அவரது ஆதரவாளரும் பகிஷ்கரிப்பு

சேலம், நவ. 26

சேலத்தில் நேற்று நடந்த தி.மு.க செயற்குழுக் கூட்டத்தை வை. கோபாலசாமியும் அவரது ஆதரவாளர்களும் புறக்கணித்தனர்.

கருணாநிதியின் தலைமையைத் தாங்கள் அங்கீகரிக்கவில்லை என்று அவர்கள் கூறினார்கள்.

தாங்களே உண்மையான தி.மு.க. என்று அவர்கள் அடித்துக் கூறினார்கள்.

தி.மு. கவின் செயற்குழுக் கூட்டங்கள் வழக்கமாக கட்சித் தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் தான் நடக்கும்.

என்றாலும் நேற்றைய கூட்டம் சேலத்தில் நடத்தப்பட்டது.

அறிவாலயத்தில் கூட்டம் நடத்தப்பட்டால் கோபாலசாமி ஆதரவாளர்கள் அறிவாலயத்தைக் கைப்பற்ற முயலலாம். இதனைப் பயன்படுத்தி பொலீஸார் அறிவாலயத்தை இழுத்து மூடி முத்திரையிடலாம் என்ற அச்சமே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

தி.மு. கவில் ஏற்பட்டுள்ள பிளவுக்கு விடுதலைப் புலிகள் இயக்கமே காரணம் என்ற ஊர்ஜிதம் செய்யப்படாத உளவுத் தகவல்களை நம்பாமல் இருக்க முடியாது என்று கருணாநிதி கூறினார்.

எனினும் எல்லாச் சமரச முயற்சிகளையும் கோபாலசாமி நிராகரித்துவிட்டார் என்றும் கருணாநிதி காரணம் காட்டினார்.

ராஜீவின் படுகொலைக்குப் பிறகு விடுதலைப் புலிகள் மீது கொண்டிருந்த அனுதாபத்தை தி. மு. க. இழந்துவிட்டது. என்றாலும் இலங்கைத்தமிழர் பிரச்சினையில் கட்சிக்கு அக்கறை இல்லை என்பதல்ல இதன் பொருள் என்றும் கருணாநிதி கூறினார்.

ராஜீவ் படுகொலையை இனப்பிரச்சினையில் இருந்து வேறுபடுத்திப் பார்க்குமாறு அவர் மத்திய அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்.

இலங்கையில் தமிழருக்கு தமிழ் ஈழம் அதாவது தனி நாடு அமைக்கவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி வந்த தி. மு. க, இப்போது அந்த நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு தன்னாட்சி கொண்ட தனி மாகாணம் தமிழருக்கு அமைக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டை மேற்கொண்டுள்ளது என்று கருணாநிதி கூறினார்.

இருப்பினும்— இலங்கைத் தமிழர் தனித்தாயகத்தைப் பெற்றால் தி. மு. கவுக்கு மட்டற்ற மகிழ்ச்சிதான் என்றும் கருணாநிதி கூறினார்.

கருணாநிதி இப்போது அறிவித்துள்ள புதிய இலங்கைத் தமிழர் கொள்கைக்கு இன்னமும் தி. மு. கவின் பொதுக் குழு அங்கீகாரமளிக்கவில்லை.

(இ-எ)

## புதிய மாணவருக்கான கற்கை நெறி ஆரம்பிப்பதை தாமதிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ். பல்கலைக்கழக 1992/93 கல்வி ஆண்டின் புதுமுக மாணவர்களுக்கான கற்கை நெறிகளை ஆரம்பிப்பதைத் தாமதப் படுத்துக.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரிடம் பாதிக்கப்பட்ட மாணவர் ஒன்றியம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கான தீர்மானம் நேற்று மாலை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற பாதிக்கப்பட்ட மாணவர் ஒன்றியத்தின் கலந்துரையாடலில் எடுக்கப்பட்டுள்ளது.

1992 ஏப்ரலில் நடைபெற்ற ஜி. சீ. ஈ (உயர்தர) பரீட்சையில் தோற்றி பாதிக்கப்பட்ட மாணவர்களின் நன்மை கருதி யாழ். பல்கலைக் கழக மட்டத்தில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுடன் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் பெறுபேறுகள் தெரியவரும் வரை அனைத்துப் பீடங்களிலும் கற்கை நெறிகளை ஆரம்பிப்பதை தாமதிக்குமாறு கோரும் மகஜர் ஒன்றும் யாழ். பல்கலைக் கழக துணைவேந்தரிடம் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கையெழுத்துகளுடன் கையளிக்கப்பட உள்ளது.

இதேவேளை யாழ். பல்கலைக் கழகத்திற்கு 1992/93 கல்வி ஆண்டிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களில் தம்மை பதிவு செய்து கொள்ள விரும்புவர்கள் விரைவில் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் பாதிக்கப்பட்ட மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

(இ-162)

## வடமராட்சி மாணவர் கலந்துரையாடல்

1992 ஏப்ரல் ஜி. சீ. ஈ (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்ட வடமராட்சி பகுதி மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டி யங் றோயல் கல்வி நிலையத்தில் நடைபெறும்.

பாதிக்கப்பட்ட மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கலந்துரையாடலில் மிக முக்கிய முடிவுகள் எடுக்கப்பட உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-162)

## கொலை முயற்சியிலிருந்து எகிப்து பிரதமர் தப்பினார்

கெய்ரோ, நவ. 26

படுகொலை முயற்சி ஒன்றில் இருந்து எகிப்து பிரதமர் நேற்று மயிரிழையில் உயிர் தப்பினார் என்று அறிவிக்கப்பட்டது.

அவர் பயணம் செய்த வாகன அணி கடந்து சென்ற பின்னர் கார் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்தது என்றும்—

அதில் சிக்கி பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்தார் என்றும்—

12 பேர் படுகாயமடைந்தார்கள் என்றும்—கெய்ரோ வானொலி அறிவித்தது.

16 முஸ்லிம் அடிப்படைவாதிகளுக்கு இராணுவ நீதிமன்றம் விதித்த மரணதண்டனையை நிறைவேற்றியதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக இந்த கார்க் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-எ)

## பெண்கள் மீது படையினர் வன்முறை

யாழ்ப்பாணம், நவ. 26

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்ப் பெண்கள் மீது ஸ்ரீலங்காப் படைகள் பாலியல் வன்முறைகளை பிரயோகிக்கும் சம்பவங்கள் தொடர்ந்தும் நடந்து வருகின்றன.

அண்மையில் பிரம்படி தீவைச் சேர்ந்த 6 தமிழ்ப் பெண்கள் கொமாண்டோப் படையினரால் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

புலிபாய்ந்த பாலம், பெரிய மடு ஓரம் பகுதிக்கு விறகு வெட்ட இப்பெண்கள் சென்ற வேளை, அப்பகுதியில் பதுங்கியிருந்த கொமாண்டோப் படையினர் அவர்களை பலாத்காரமாக பாலியல் வன்முறைக்கு உட்படுத்தினர். இதற்கு பின் அவர்கள் அடித்து விரட்டப்பட்டனர்.

(ஒ-3)

### இராணுவத்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கு வடக்கு - கிழக்கு வாழ் மக்களுக்கு என்ன வசதி உண்டு. மின்சாரம் இல்லை. தொலைக்காட்சி இல்லை. வானொலி அங்கு இயக்குவதற்கு வழி இல்லை உணவு, எரிபொருள் தட்டுப்பாடு அங்கு நிலவுகிறது. இந்த நிலையில் வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் அரசாங்கத்தை ஆதரிப்பார்களா?

விடுதலைப் புலிகள் தாக்கப் போகின்றனர் என்பது பாதுகாப்புப் படையினருக்கு ஏற்கனவே தெரிந்திருந்ததாயின் பூநகரி முகாமைப் பலப்படுத்துவதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

இந்த நிலைமைக்கு யார் பொறுப்பு? மக்களின் அதி உயர் மதிப்புக்குரிய நாடாளுமன்றத்தில் மக்களுக்குப் பதிலளிக்கக் கூடிய பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் இல்லாதது பெரும் குறைபாடு ஆகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

(ஒ-எ-6)

### தெற்கில்...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதாரத்தை மீண்டும் சீர் குலைப்பதை அனுமதிக்கப் போவதில்லை என்பதில் அரசு உறுதியாக இருக்கிறது.

கொழும்பில் இராணுவச் சோதனைச் சாவடிகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. பாதுகாப்புப் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இத்தனை பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும் கூட இப்போது நிலவும் முறுகல் நிலை பல தமிழர்களின் உள்ளங்களில் மீண்டும் அச்சத்தை ஏற்படுத்தி இருப்பதாக தமிழ் எம். பி. ஒருவர் கூறினார்.

(ஒ-எ-6)

### படையினரின்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கையில் நான்கு விரல்கள் துண்டிக்கப்பட்டன. காலிலும் இவருக்குக் காயம் ஏற்பட்டுள்ளது. யாழ். போதனா வைத்திய சாலையில் இவர் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பீரங்கித் தாக்குதலினால் இவர்களது படகு சிதறி கடலில் மூழ்கியது. சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்களும் கடலில் மூழ்கின.

(இ-17-15-3)

### குடாநாட்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மழை பெய்துள்ளதாக திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள வானிலை ஆராய்ச்சிப் பகுதி தெரிவித்துள்ளது.

இந்த மாதம் பெய்த மழையுடன் ஒப்பிடுகையில் இது கூடுதலானது ஆகும். இம்மாதம் இதுவரை 332.7 மில்லி மீற்றர் மழையே பெய்துள்ளது.

இதேவேளை இவ்வருடம் செப்டெம்பர் மாதத்தில் 46.7 மில்லி மீற்றர் மழையும் ஒக்டோபர் மாதத்தில் 442.2 மில்லி மீற்றர் மழையும் பெய்துள்ளது.

சென்ற வருடம் செப்டெம்பர் முதல் டிசம்பர் வரை 678.2 மில்லி மீற்றர் மழை பெய்தது.

இவ்வருடம் செப்டெம்பர் முதல் இதுவரை 921.6 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது.

(இ-162)

### உபாலி நிறுவனத்தில்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தப் பிணக்கை அடுத்து அங்கு வேலை செய்யும் பணியாளர்களிடையே குழப்பம் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கிலேயே குண்டுப் புரளியைக் கிளப்பி அதன் மூலம் ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டதாகக் கருதப்படுவதாக பி. பி. ஸி. சிங்கள சேவையில் தெரிவிக்கப்பட்டது.

(இ-5-6)

### தமிழர் மீது தாக்குதல்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இதேவேளை —

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனின் பிறந்த நாளை ஒட்டி நேற்று இரண்டாவது நாளாக நாடு முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன என்றும் —

அனைத்துப் படையினரும் பொலீஸாரும் முழுத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஒ-எ-6)


## முக்கிய அறிவித்தல்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

மாவீரர் தின விழா இறுதி நாளான சனிக்கிழமை **27-11-1993** அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களும் பூட்டப்பட்டிருத்தல் வேண்டும் என அறிவிக்கின்றோம்.

பொதுச் செயலாளர்
யாழ். மாவட்டம்

(சி/6606)

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
சுன்னாகம்

## ஆண்டு 6 அனுமதி - 1994

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 10-12-93 ஆகும்.

குறித்த திகதிக்குள் விண்ணப்பித்து விசேடமாகத் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்குக் கல்லூரி நலன் விரும்பிகளால் பழைய மாணவர் சங்கம் மூலம் ஆண்டு 6 தொடக்கம் ஆண்டு 11 வரை புலமைப் பரிசில் வழங்கப்படும்.

—அதிபர்.

(C/2048)

காலம் நடையும் கருத்துடன் நற்பயிரினமும் வாழ்விடத்தில் வளர்த்தல் வதிவிட வேளாண்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 26-11-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.